**செய்தி வெளியீடு எண்: 31** **நாள்: 18.01.13**

**<u>பத்திரிக்கை செய்தி</u>**

**<u>மாற்றுத் திறனாளிகளுக்கு ஒருமாத இலவச மல்டிமீடியா பயிற்சி அறிவிப்பு</u>**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் மூலம், கை, கால் பாதிக்கப்பட்ட **50** மாற்றுத் திறனாளிகளுக்கு ஒரு மாத இலவச மல்டிமீடியா பயிற்சி தேசிய திரைப்பட வளர்ச்சி கழகம் நிறுவனத்தின் உதவியுடன் நடத்தப்படுகிறது. இப்பயிற்சி மீடியா பயிற்சி மையம், கோ ஆப் டெக்ஸ் வளாகம், பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னையில் நடத்தப்படவுள்ளது. இப்பயிற்சிக்கான தகுதிகளாக, மாற்றுத் திறனாளிகள் 8 ஆம் வகுப்பு தேர்ச்சியும், **16** முதல் 40 வயதுவரை உடையவர்களாகவும் இருத்தல் வேண்டும். உணவு மற்றும் தங்கும் இடம் ஆகியவை மாற்றுத் திறனாளிகள் தங்கள் சொந்த செலவில் மேற்கொள்ள வேண்டும். மாற்றுத் திறனாளிகள் செலுத்த வேண்டிய பயிற்சிக்கான கட்டணத்தை அரசு செலுத்துகிறது.

மல்டிமீடியா பயிற்சியில் Designing Centres, Digital Board Designers shop, Satellite TV Channels, Media Production House, Production Studios, Self Designing Studio ஆகியவை கற்று தரப்படவுள்ளன.

இப்பயிற்சிக்கு விருப்பமுள்ள மாற்றுத் திறனாளிகள், விண்ணப்பத்துடன் கல்வி தகுதி சான்று நகல், மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை நகல் ஆகியவற்றுடன் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர், சென்னை /காஞ்சிபுரம் மாவட்டம் / திருவள்ளூர் ஆகியோரிடம் அந்தந்த மாவட்டத்தை சேர்ந்தவர்கள் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ **23.01.2013** க்குள் அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

(ஒம்) வி.கு. ஜெயக்கொடி
முதன்மைச் செயலாளர் /
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**